# தென் ஆசியா ஓர் அறிமுகம்

*எஸ். எம். ஆலிப், சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.*

இந்திய உப கண்டம், பிரிட்டிஷ் - இந்தியா, இந்திய சாம்ராஜ்யம்[1] என அழைக்கப்படும் தென்ஆசியாவானது இன்று சில தீவுகளாயமைந்த இலங்கை, மாலைதீவு என்பவற்றையும் மற்றும் இந்தியா, பாகிஸ்தான், பங்க்ளாதேஸ், பூட்டான், நேபாளம் ஆகிய அரசுகளைக் கொண்டமைந்த நான்கு மில்லியன் சதுர கிலோ மீற்றருக்கும் கூடுதலான நிலப்பரப்பினையும் உள்ளடக்கிய ஒரு பரந்த பிரதேசமாக உள்ளது.[2]

வரலாற்று ரீதியாக ஆரம்பகாலத்தில் இந்திய உப கண்டம் மூன்று பிரிவுகளாக (Region) பிரிக்கப்பட்டிருந்தது. அப் பிரிவுகளை வரலாறு, மரபு மற்றும் கலாசாரம் என்பனவற்றால் தமக்கே உரித்தான பண்புகளையும் கொண்டமைந்திருந்தன. இப்பிராந்தியத்தில் முதலாவதாக இமயமலையைச் சார்ந்ததும் வட இந்திய சமவெளியைக் குறிப்பதுமாக உள்ளது. இப் பிராந்தியத்தில் கங்கா (Ganga) மற்றும் இந்து (Indus) நதிகள் அமைந்து காணப்படுகின்றன. இரண்டாவதாக Deaccan Plateau பகுதி அமைவதுடன் வட இந்திய உப கண்டத்துடன் மலைகளாலும் கிழக்கே கடலாலும் மற்றும் மேற்கே மலைத் தொடரினாலும் பிரிக்கப்பட்டுக் காணப்படுகின்றது. மூன்றாவது பகுதி தற்போதைய இந்திய மாநிலங்களான தமிழ்நாடு முதலான திராவிடர்கள் வாழும் பிராந்தியங்களைக் குறிப்பிடுவதாக உள்ளது.[3]

இந்திய உப கண்ட வரலாற்றினை ஆராயும் எவரும் அதனை மூன்று பெரும் ஆட்சிப் பிரிவு நிலைகளில் வைத்து ஆய்வு செய்கின்றனர். அப்பிரிவு மூன்றும் உப கண்டத்தை ஆட்சி செய்த மூன்று வேறுபட்ட ஆட்சியாளர்களைக் குறிப்பிடுவதாக அமைகின்றன. அவர்கள் முறையே ஹிந்து, முஸ்லிம் மற்றும் ஆங்கிலேயர் என்போராகும். இவர்கள் இந்தியாவை மூன்று வேறுபட்ட காலப்பிரிவில் ஆட்சி செய்ததுடன் ஒவ்வொரு ஆட்சிப்பகுதியும் தமக்கே உரித்தான சமூக பொருளாதார மற்றும் கலாசார கட்டமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர். இவற்றிற்கு இடையே ஏற்பட்ட தொடர்புகளினால் கலப்பு ரீதியான கலாசாரமும் உண்டாகியுள்ளது.[4]

தென் ஆசியா ஒரு பிராந்தியம் என்ற கருத்தானது அண்மைக் காலத்தில் தோற்றம் பெற்றது எனக்குறிப்பிடலாம். ஆனாலும் இப்பிராந்தியம் பற்றி வரையறை செய்யப்பட்டதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான எந்தவொரு உடன்பாடுகளோ அல்லது வரைவிலக்கணங்களோ முழுமையாக காணப்படவில்லை. சிலர் தென்ஆசியா என்பதனை இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், பூட்டான் மற்றும் மாலைதீவு அரசுகளை உள்ளடக்கிய ஆசியாக் கண்டத்தின் தென்பகுதியாக வரையறை செய்கின்றனர்.[5] இவ்வரையறையானது அமெரிக்கர்கள் தங்களது வெளிநாட்டுக்கொள்கைகளை தீர்மானிப்பதற்கு உலகத்தை பல பகுதிகளாக பிரித்து வரையறை செய்தபோது தென் ஆசியாவுக்குள் மேற் குறிப்பிட்ட நாடுகள் அமையக் கூடியவாறு வரையறுத்தமையாலும் அவ்வரசுகள் இப்பகுதிக்குள் அடங்கலாயின. மேலும் வேறு சிலர் தென் ஆசியா என்பதனை மேற்குறிப்பிட்ட அரசுகளுடன் பாகிஸ்தானுக்கு மேற்குப்பக்கமாக அமைந்துள்ள ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கு தென் கிழக்காக அமைந்துள்ள பர்மாவையும் உள்ளடக்கியே தென் ஆசியா என வரையறை செய்து வருகின்றனர்.[6] ஆனாலும் எமது தென் ஆசியா பற்றிய ஆய்வில் ஆப்கானிஸ்தான் மற்றும் பர்மா என்பன தவிர்க்கப்பட்டே விபரிக்கப்படுகின்றது.

ஊன்றி அவதானித்தோமேயானால் இப்பிராந்தியத்தில் இந்தியா பிரதான அரசாக (Core State) திகழ்வதனை எம்மால் விளங்கிக் கொள்ள முடியும். இந்தியா இப்பிராந்தியத்தின் எல்லா அரசுகளுடனும் நிலரீதியான அல்லது நீரியல் ரீதியான தொடர்பினைக் கொண்டிருக்க இப்பிராந்தியத்தின் ஏனைய அரசுகளிடையே அவ்வாறான தொடர்பினைக் காணமுடியாமையே இந்தியாவை இப்பிராந்தியத்தில் முதன்மை நிலைக்கு இட்டுச் செல்கின்றது.[7]

மேலும் இப்பிராந்திய நாடுகளிடையே பொதுவான புவியியல் முறை (Geopolitics) செல்வாக்கு செலுத்தி வருகின்ற போதிலும் இந்நாடுகளிடையே முரண்பாடுகளும் ஒற்றுமையின்மையும் அடிப்படையில் சமத்துவமற்ற நிலைமையினால் தோற்றம் பெற்றன எனலாம். இவ்வாறான சமத்துவமற்ற நிலையும் முரண்பாடுகளும் இந்தியாவை மையமாக அல்லது பிரதானமாகக் கொண்டு எழுந்தவையாக கருதப்படுகின்றது. இதன் விளைவாக இப்பிராந்தியத்தில் தோற்றம் பெற வருகின்ற பிணக்குகளுக்கு இந்தியா மூலகாரணியாக இருந்து வருகின்றது.

பிரித்தானியர், தென்ஆசியாவின் முழுப்பகுதியையும் தமது கட்டுபாட்டின் கீழ் ஆட்சி செய்த போதும் ஆப்கானிஸ்தான், அவர்களின் ஆட்சிக்கு உட்படாத பிரதேசமாக இருந்து வந்துள்ளது. அதேபோல் நேபாளமானது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சுதந்திர அரசாக தொடர்ந்து இருந்து வந்த போதும் பிரித்தானிய இந்தியாவுடன் நட்புரீதியான தொடர்பை பேணி வந்துள்ளது. இலங்கையானது காலணித்துவவாதிகளின் முடிக்குரிய அரசாக ஆங்கிலேயரினால் தனியாக ஆட்சி செய்யப்பட்டு வந்தது. மேலும் இலங்கை மிக நீண்ட காலமாக ஏனைய தென் ஆசிய அரசுகளிடமிருந்து விடுபட்டு சுதந்திரமான அரசியல் மரபினை பின்பற்றி வந்துள்ள போதும் அதன் கலாசாரமானது இந்திய பௌத்தம், இந்து மற்றும் இந்தியாவில் பரவிய இஸ்லாமிய மதம் என்பவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டதாகவும் இருந்து வந்துள்ளது.

ஆங்கிலேயர் பன்மைத்துவ அமைப்பினைக் கொண்ட தென்ஆசிய மக்களை ஒற்றுமை மற்றும் சகிப்புத்தன்மை கொண்ட மக்களாக மாற்றிமைக்கும் நோக்கில் அவர்களின் வேறுபட்ட கலாசார, மரபு, பழக்கவழக்கங்கள் எனபவற்றை பெருமளவு புறக்கணித்து பொதுவான சட்ட, அரசியல், மற்றும் நிருவாக நிறுவனங்க்ளை ஏற்படுத்துவதில் பெருமளவு முனைப்புக் காட்டினர். இது தென் ஆசிய மக்களிடையே முரண்பாட்டுக்கும் பிரிவினைக்கும் பிரதான பங்களிப்புச் செய்த காரணியாக விளங்கியது.

தென் ஆசியாவின் புவியியல் நிலையை அவதானிக்கும் போது மிகத் தெளிவான வேறுபட்ட புவியியல் அமைப்பினைக் கொண்டிருப்பதை கண்டு கொள்ள முடியும். ஏனைய ஆசிய நாடுகளை தென் ஆசியாவில் இருந்து பிரிக்கும் பகுதியாக வடக்கே இமயமலை இருந்து வருகின்றது. இந்த இமைய மலையானது உப கண்டத்தின் வடக்குப்பகுதியில் 800 மைல் நீளமுள்ள ஒரு தடுப்புச் சுவராகவும் அமைந்துள்ளது.[8] அத்துடன் இப்பிராந்தியமானது இந்து மகா கடலினால் (Indian Ocean) சூழப்பட்டதாகவும் உள்ளது.

மேலும் இவ் உப கண்டத்தின் மேற்காகவும் கிழக்காகவும் தொடராக அமைந்துள்ள மலைத்தொடரானது இப்பிராந்தியத்துக்கு இயற்கையாக கிடைத்த மற்றொரு பாதுகாப்பு அரணாக விளங்குகின்றது. இவ் உபகண்டத்தின் மேற்காக அமைந்துள்ள Hindukush மற்றும் Kirthar மலைச்சாரல்கள் பாரசீகத்தில் இருந்து இப்பிராந்தியத்தை பிரித்து தனித்துக் காட்டுகின்றன. இதே போல் கிழக்காக அமைந்துள்ள யேபய மலைத்தொடரும் அடர்த்தியான காடுகளும் இப்பிராந்தியத்தை பர்மாவிடம் இருந்து பிரிந்து தனித்துவமான தென் ஆசியப் பிராந்தியமாக அடையாளப்படுத்துகின்றது. இது தவிர இப்பிராந்தியமானது நான்கு வேறுபட்ட காலநிலையையும் ஸ்தல அமைப்பையும் கொண்டிருப்பதுடன் மிக உயரமான மலைத்தொடர் தொடக்கம் அழகிய கடற்கரை வரை கொண்டமைந்ததாக விளங்கி வருகின்றது.

## தென் ஆசிய அரசுகளின் சமூக, பொருளாதார அரசியல் நிலைமைகள்

சகல தென் ஆசிய அரசுகளிடையே காணப்படும் பொதுவாக பிரச்சினையானது இயற்கையாக அமையப்பெற்ற சிறிய வேறுபாடுகளுடன் பொதுத்தன்மை கொண்டதாக வளர்ந்து வருகின்றது. இந்த வேறுபட்ட தன்மைகளுள் அவைகள் எல்லாமே குறைவிருத்தி நாடுகளாக இருந்து வருவதுடன் அதிகரித்து வரும் சனத்தொகையானது மக்களின் அதிகரித்த தேவையினையும் எதிர்பார்க்கையினையும் நிறைவு செய்ய முடியாமல் திணறிவருவதுடன் இப்பிராந்திய மக்களின் பொருளாதார தேவையும் சமூகப்பாதுகாப்பும் எதிர்காலத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் அபாயத்தையும் எதிர் நோக்கியுள்ளது. இதனைத் தவிர்க்க வேண்டுமானால் இப்பிராந்தியத்தில் காணப்படும் எல்லா அரசுகளின் கட்டமைப்பிலும் நிறுவனங்களிலும் அடிப்படையான மாற்றத்தை துரிதமாக ஏற்படுத்த வேண்டும். மக்களின் இவ்வாறான தேவைகளை நிறைவு செய்வதற்கு அரசியல் மற்றும் நிர்வாக நிறுவனங்களுக்கு மிக நீண்ட காலம் எடுக்கலாம்.

வேலையின்மை, குறைந்த பொருளாதார வளர்ச்சி வீதம், வறுமை, குறைந்த தலா வருமானம், சமத்துவமற்ற வருமானப்பங்கீடு, வெளிநாட்டு உதவிகளில் பெருமளவு தங்கியிருத்தல் என்பன இப்பிராந்திய அரசுகள் எதிர்நோக்கும் பொதுவான பொருளாதார பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. சில மூலவளங்களில் இப்பிராந்தியமானது வளமாக இருந்த போதும் ஒப்பீட்டு ரீதியில் ஏனைய பிராந்தியங்களுடன் ஒப்பிடும் போது மூலவளங்கள் குறையப் பெற்ற பிரதேசமாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

தென் ஆசியப் பிராந்தியமானது அவற்றின் பொருளாதார மட்டத்திலும் பாரிய வேறுபாட்டைக் கொண்டதாக உள்ளது. இந்தியா (555), பாகிஸ்தான் (498), இலங்கை (913) மற்றும் மாலைதீவு (2260) ஆகிய அரசுகளில் மக்களின் தலாவருமானமாக சராசரியாக 700 அமெரிக்க டொலரில் அமைந்து காணப்பட பங்களாதேஷ் (385), பூட்டான் (303) மற்றும் நேபாளம் (233) போன்ற அரசுகளில் வாழும் மக்களின் சராசரி தலா வருமானமானது 300 அமெரிக்க டொலரை விடவும் குறைந்த மட்டத்தில் உள்ளது.[9] இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கை போன்ற அரசுகளில் கைத்தொழில் மூலமாகக் கிடைக்கும் தேசிய வருமானமானது சராசரியாக 27-%[10] வீதமாகக் காணப்பட பூட்டான், நேபாளம் மற்றும் மாலைதீவு அரசுகளில் கைத்தொழில் மூலமாகக் கிடைக்கும் தேசிய வருமானமானது 12 வீதத்துக்கு சற்று கூடுதலாக உள்ளது.[11]

எல்லா தென் ஆசிய நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயமானது பிரதான இடத்தை வகித்து வருகின்றது. அதாவது சராசரியாக அந்நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியில் ¼ பங்கு விவசாய உற்பத்தியின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. விவசாய உற்பத்தியில் பிரதான உற்பத்தி வகிக்கும் நாடாக நேபாளம் விளங்குகின்றது. அதாவது அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் $^{2}/_{5}$ பங்கினை விவசாயம் பெற்று விளங்குகின்றது. மேலும் பெரும் சனத்தொகையைக் கொண்டுள்ள இப்பிராந்தியத்துக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கும் பிரதான மூலமாக விவசாயத்துறையே இன்றும் இருந்து வருகின்றது. இலங்கை மற்றும் இந்தியா என்பன விவசாய உற்பத்தியில் விருத்தியடைந்து வருவதுடன் சுயதேவையை பூர்த்தி செய்யும் நிலையிலும் உள்ளன. ஆனாலும் இப்பிராந்தியத்தை முழுமையாக அவதானிக்கும் போது பிறநாடுகளிடம் இருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து நுகரும் அரசுகளாகவே உள்ளன.

கைத்தொழில் பொருட்கள் உற்பத்தியானது இப்பிராந்திய அரசுகளிடையே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விருத்தியடைந்து வரும் நிலையில் உள்ளது. 1980களின் ஆரம்பப்பகுதியில் இவ் அரசுகளில் ஏற்பட்ட பொருளாதார கொள்கை மாற்றம் காரணமாக இந்நிகழ்வு இடம் பெற்று வருகின்றன எனலாம். இப்பிராந்தியம் உணவு உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் மிகக் கூடியளவு அதிகரித்த நாட்டம் காட்டி வருகின்றது. அந்த வகையில் இந்தியா கைத்தொழில் உற்பத்தியில் 23 வீதமான பங்கினை வகித்து, இப்பிராந்தியத்தின் கைத்தொழில் முன்னணி வகிக்கும் அரசாக திகழ்ந்து வருகின்றது. பல் தேசியக் கம்பனிகள் இப்பிராந்தியத்தில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டிவருவதுடன் இவ்முதலீடானது இப்பிராந்திய அரசுகளின் எதிர்கால பொருளாதார நவீனத்துவப் போக்குகளுக்கு முக்கியமான பங்கினை வகித்து வருகின்றது. ஆனாலும் இப்பிராந்தியம் முழுவதும் உயர்ந்த பணவீக்கத்தன்மை காணப்படுவதுடன் சில அரசுகளில் இப்பணவீக்கமானது இரட்டை இலக்கத்தை கொண்டதாகவும் உள்ளது. சென்மதி நிலுவையில் ஏற்பட்டு வரும் பாதகமான நிலைமையே இதற்கான பலமான காரணமாக இருந்து வருகின்றது. வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் கடன் சுமையானது இவ்வரசுகளின் தேசிய வருமானத்தில் கடுமையான சுமைகளை ஏற்படுத்தி சென்மதி நிலுவையில் எதிர்மறையான விளைவுகளுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் காலாய் அமைந்து விடுகின்றது.

உலக சனத்தொகையில் $^1/_5$ பங்கினர் வாழும்பிராந்தியமாகவும்[12] இயற்கை மூலவளங்களைக் கொண்டதாகவும் காணப்படும் தென் ஆசியாவானது வறுமையை மிக உயர்ந்த நிலையில் வைத்திருப்பது ஆராயப்பட வேண்டிய விடயமாக உள்ளது. இந்தவகையில் 2000 ஆண்டு ஜூனில் ஒரு பில்லியன் மக்களைக் கடந்து விட்ட இந்தியா (தற்போது சனத்தொகையில் முதன்மை நாடாக விளங்கும் சீனா (1.25 Billion)) இதே சனத்தொகை வளர்ச்சி வீதத்தால் சென்றடையுமானால் 2012ஆம் ஆண்டளவில் முதன்மை நிலையை அடைந்துவிடும் எனவும் எதிர்பார்க்கப்படும் நிலையிலும் உள்ளது.

உயர்ந்த சனத்தொகை வளர்ச்சி வீதத்தையும் அதிக மக்கள் தொகையையும் கொண்டமைந்துள்ள தென்ஆசியாவானது ஆபிரிக்காவுக்கு அடுத்ததாக வட்டியில்லாக் கடனை கொண்டதாக பெருமளவு வெளிநாட்டு உதவியில் தங்கியிருக்கும் பிராந்தியமாக அமைவதுடன் உலக வங்கியின் இணைப்பு நிறுவனமான சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திடம் இருந்து (IDA) வறுமை உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் பிரதேசமாகவும் விளங்குகின்றது.

உலக வங்கியின் கணிப்பீட்டின்படி தென் ஆசியாவானது தொடர்ந்தும் வறுமை அதிகரித்து வரும் பிரதேசமாக உள்ளது. இவ் வறுமையானது மொத்தத் தேசிய உள்நாட்டு உற்பத்தியில் 1998இல் 5.2 வீதமாகவும் 1999இல் 5.4 வீதமாவும் இருந்து வந்துள்ளமை இதனைத் தெளிவாக புல்ப்படுத்துகின்றது. அத்துடன் உலகில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களில் 40 வீதமானவர்கள் தென் ஆசியாவில் வாழ்வதாகவும் அவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது. 1990களில் இப்பிராந்தியத்தின் வறுமை நிலையில் ஒரு மிதமான வீழ்ச்சி அவதானிக்கப்பட்ட போதிலும் முழுமையாக வறுமையை ஒழிக்க முடியாத பிரதேசமாக தென் ஆசியா இருந்து வருகின்றது. இதற்கு பிரதான காரணியாக அமைவன மனித வள அபிவிருத்தி மிகக் குறைந்த மட்டத்தில் பேணப்பட்டு வருவதும் பெண்களின் அந்தஸ்தும் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுவதுமாகும்.[13] தென் ஆசியாவின் மனித வள அபிவிருத்தியை அவதானிப்போமேயானால் இன்றும் பாரிய சவால்களை எதிர்நோக்கும் பிரதேசமாகவே குறிப்பிடப்படுகின்றது. இன்றுவரையும் இப்பிராந்தியமானது உயர்ந்தளவிலான தொற்று நோய்களையும் எழுத்தறிவற்றவர்களையும் கொண்ட பிரதேசமாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

உலக வங்கியின் அறிக்கையின்படி தென் ஆசியாவானது ஆரம்ப கல்விக்கு கூடிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை இப்பிராந்தியத்தின் சனத்தொகையில் அரைவாசிப் பேர் எழுதவோ அல்லது வாசிக்கவோ முடியாதவர்களாக உள்ளனர். இப்பிராந்தியத்தில் கல்விக்காக செலவிடும் தொகையானது உலக நாடுகள் தமது கல்விக்காக செலவிடும் தொகையிலும் மிகக்

குறைந்த பகுதியாகவே உள்ளன. மேலும் சிறுவர்களை விட சிறுமிகள் கல்வியில் மிகப்பயங்கரமான முறையில் பின்தங்கி இருப்பதாகவும் அவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

இந்தியாவின் வறுமை நிலைமையை அவதானிக்கும் போது 1970களில் இருந்து அந்நாட்டின் வறுமை நிலை வீழ்ச்சி நிலையை அடையாளப்படுத்தியுள்ள போதும் வறுமை நிலையானது இந்தியாவில் இன்றும் ஆபத்தான கட்டத்திலேயே உள்ளது. அதாவது இந்தியாவில் மொத்த சனத்தொகையில் சுமார் 300 மில்லியன் மக்கள் இன்னும் வறுமையிலேயே வாழ்கின்றனர். அத்துடன் இந்தியாவின் மொத்த சனத்தொகையில் 70 வீதமான வறுமை கிராமப்புறத்தில் காணப்படுகின்றது. தவிர இந்தியாவின் மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபட்ட வகையில் வறுமை மாறுபட்டும் காணப்படுகின்றது.[14]

இந்தியாவில் நிலவி வரும் வறுமைக்கும் மற்றும் இவ்வேறுபட்ட சமத்துவமற்ற வறுமைக்கும் பிரதான காரணிகளுள் முக்கியமானவைகளாக இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் இழப்பும் அதனை மீள கட்டியமைப்பதற்காக ஏற்படும் செலவுகளும் அமைகின்றன. வருடாந்தம் 7.5 மில்லியன் ஹெக்டேயர் பயிர்ச்செய்கை நிலங்கள் இயற்கை அனர்த்தத்தினால் சேதமடைகின்றன. 10 பில்லியன் ரூபா பெறுமதியான சேதம் இதனால் ஏற்பட்டு விடுகின்றது.[15]

பங்களாதேஷில் 1980களில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டமானது வறுமை ஒழிப்புக்கு எதிரான பலமான ஒரு யுத்தமாக வர்ணிக்கப்படுகின்றது. இதன் விளைவாக வறுமை ஒழிப்பில் ஒரு முன்னேற்றத்தை பங்களாதேஷ் கண்டு வருகின்றது. இந்நடவடிக்கை காரணமாக மிகவும் வறுமை நிலையானது 1991 - 1992 காலகட்டத்தில் 43 வீதமாகவும் 1995 - 96 கால கட்டத்தில் 36 வீதமாகவும் வீழ்ச்சியடையலாயிற்று. இதே கால கட்டத்தில்

ஓரளவு வறுமையில் உள்ளோரின் தொகையானது 59 வீதத்திலிருந்து 53 வீதமாக வீழ்ச்சியடையலாயிற்று.

நிலையான பொருளாதார வளர்ச்சி, சமூகத்துறையில் அரசின் செலவீடு அதிகரிப்பு, பாடசாலை சிறார்களின் தொகை அதிகரிப்பு, அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றமை என்பன 1990களின் இரண்டாவது அரைப்பகுதியில் பங்களாதேஷின் வறுமை நிலை வீழ்ச்சியை நோக்கி செல்வதற்கு பிரதான காரணிகளாக விளங்கின.

கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வறுமை நிலை வீழ்ச்சியடைந்து வருகின்றபோதும் கிராமப்புறங்களில் வறுமைநிலையானது தொடர்ந்தும் நிலவி வருகின்றது எனலாம். 1995 - 96களில் மொத்த கிராமிய சனத்தொகையில் இன்னும் 40 வீதமானோர் மிகவும் வறுமை நிலையிலேயே உள்ளனர். பலதரப்பட்ட காரணிகளின் பங்களிப்பு வறுமையைக் குறைப்பதற்கு காரணமாக இருந்த போதும் சமத்துவமற்ற வருமானப் பங்கீடும் அதில் ஏற்பட்டு வரும் தொடரான அதிகரிப்பும் வறுமையைக் குறைப்பதில் மட்டுப்பாடு செலுத்துகின்றன.[16]

1980களில் இருந்து பாகிஸ்தானில் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதனை அவதானிக்கலாம். இதன் விளைவாக வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களின் நிலையில் வீழ்ச்சி ஏற்படுட்டுள்ளது. பாகிஸ்தானில் வறுமை நிலையானது 1984 - 85 கால கட்டத்தில் 46 வீதமாகவும் 1990-91 காலகட்டத்தில் 34 வீதமாகவும் வீழ்ச்சியடையலாயிற்று. ஆனாலும் 1990 - 91 காலகட்டத்திற்கு பின்பு குடிசன மதிப்பீட்டுத் தொகை மேற்கொள்ளப்படாததன் காரணமாக வறுமை தொடர்பாக இறுதியான முடிவுக்கு வர முடியாமல் உள்ளது. பாகிஸ்தானின் வறுமை

நிலையில் பிராந்திய அடிப்படையில் வேறுபாடு அதாவது கிராம - நகர்ப்புற வேறுபாடு தொடர்ந்தும் காணப்பட்டு வருகின்றது. வறுமை மற்றும் தனி மனித வள அபிவிருத்தியிலும் நகர்ப்புறத்தை விட கிராமப்புறம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு முன்பிலும் மோசமாக உள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இனரீதியான தொடர்பு மற்றும் அரசுக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்புகள் இலங்கையின் இனப்பிரச்சினையான தமிழ், சிங்கள முரண்பாட்டுக்கு காரணமாக இருந்து வருகின்றன. 20ஆம் நூற்றாண்டின் கடைசி இரண்டு தசாப்தங்களாக இடம் பெற்றுவரும் உள்நாட்டு இனப்பிரச்சினையானது மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளதுடன் அந்நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் வறுமையிலும் பெரும் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. 1990களின் ஆரம்ப பகுதியில் இருந்து இலங்கை அரசாங்கத்தினால் வறுமை ஒழிப்புக்காக பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றில் சனசக்தி 1990களின் ஆரம்பப் பகுதியிலும், 1994களில் இருந்து சமுர்த்தியும் முக்கிய இடத்தை வகித்து வருகின்றன.

மனித வள அபிவிருத்தியில் தென் ஆசியாவில் முதன்மைபெற்று வரும் இலங்கையானது இனவன்முறை தீவிரமடைந்ததன் பிற்பாடு இன, மத மற்றும் சாதி அடிப்படையிலான அநீதியால் இச்சமூகங்கள் பெருமளவு தாக்கத்துக்குள்ளாகி வருவதாக மனிதவள அபிவிருத்தி அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.[17] 1983க்குப் பின்னர் இன வன்முறை உக்கிரமடைந்ததன் காரணமாக அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மோதல் ஆரம்பமானதன் விளைவாக இதுவரை 55,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்ததன் காரணமாக உள்நாட்டில் அகதிகளாக்கப்பட்டோர் அதிகரித்துவருவதும் குறிப்பிடத்தக்கதொரு

விடயமாகும். 1994 ஜுலை இறுதியில் இலங்கையில் 524,262 பேர் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் 78 வீத தமிழர்கள், 13வீத முஸ்லிம்கள், 8வீத சிங்களவர்களாகவும் உள்ளனர். தற்போதைய போர் சூழ்நிலை காரணமாக சுமார் 3 இலட்சம் சிறார்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து வாழ்கின்றனர் என 1996ஆம் ஆண்டின் யுனிசெப்பின் அறிக்கை கூறுகின்றது.[18]

தொடராக ஏற்பட்டு வரும் மண்சரிவும் வெள்ளப்பெருக்கும் நேபாள மக்களுக்கு மாபெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன. ஒவ்வொரு வருடமும் சுமார் 350 மக்கள் இவ்வாறான இயற்கை அனர்த்தங்களால் கொல்லப்படுவதாக தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதற்குப் பிரதான காரணமாக ஒதுக்கி வைக்கப்பட்ட அரச காடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடரான காடழிப்பு நடவடிக்கையாகும். இக்காடழிப்பானது வருடாந்தம் 2 வீதமாக உள்ளது.

சிறிய நாடுகளான பூட்டான மற்றும் மாலைதீவு என்பவற்றில் ஒப்பீட்டு ரீதியில் வறுமை தொடர்பான பிரச்சினை மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவி வருகின்றது. ஆனாலும் சில அடையப் பெற முடியாத ஆவல்கள் காரணமாக அந்நாடுகள் எளிதில் வறுமையால் பாதிப்படையக் கூடிய நிலையிலும் உள்ளன.

தென்ஆசியாவில் அமைந்துள்ள எல்லா அரசாங்கங்களும் பொருளாதார வளர்ச்சியில் பாரிய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்குப்பதிலாக தேசிய செல்வத்தின் பெரும்பகுதியை நுகர்வுப்பகுதியில் செலவிடுவதிலேயே அதிக ஆர்வம் காட்டிவருகின்றன. இவ்வரசாங்கங்களானது தனிநபருக்காக செலவிடும் தொகை 1975ல் 25 அமெரிக்க டொலராக இருந்தது. 1995ல் 56 டொலராக அதிகரித்த போதும் தென்ஆசியாவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் தொகையானது

1960களில் 170 மில்லியனாகவும் 1995ல் 515 மில்லியனாகவும் அதிகரித்தே வந்துள்ளது.

மேலும் அடிப்படைத் தேவைகளை உற்பத்தி செய்யும் துறையில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு குறைந்த மட்டத்தில் காணப்பட இலாப நோக்கற்றதுறையில் பாரிய முதலீடுகளையும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. இதன் விளைவாக வேலைவாய்ப்பினை வழங்கும் மிகப்பிரதான துறையாக அரசாங்கத்துறையே காணப்பட்டு வருகின்றது. இதனால், வளர்ந்து வரும் இப்பிராந்தியத்தின் மக்கள் தொகைக்கேற்ப பொருளாதார வளர்ச்சி, சமூக மற்றும் பொருளாதார சந்தர்ப்பங்களை விரிவாக்குதல் போன்ற நிலையான பொருளாதார அபிவிருத்தியைக் கொண்டுவரும் திட்டங்களில் தென் ஆசிய அரசாங்கங்கள் மிகச் சிறிய பங்கினையே வகித்து வருகின்றன.[19]

சகல தென்னாசிய நாடுகளிலும் உள்நாட்டுக் கடனானது கடந்த தசாப்தத்தில் திடீரென அதிகரித்துள்ளது. இது ஏனைய மூலவளங்களின் பயன்பாட்டிலும் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கமானது சகல தென் ஆசிய அரசுகளிலும் பிரதிபலிப்பதனைக் காணலாம். மொத்த தேசிய கடன் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) பங்களாதேஷில் 61.5 வீதமாகவும் பூட்டானில் 44.5 வீதமாகவும், இந்தியாவில் 61.5 வீதமாகவும், மாலைதீவில் 60 வீதமாகவும், நேபாளத்தில் 64 வீதமாகவும், பாகிஸ்தானில் 91.2 வீதமாகவும், மற்றும் இலங்கையில் 85 வீதமாகவும் உள்ளது.[20]

இப்பிராந்தியத்தில் காலணித்துவ ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து சுதேசிகளின் பொருளாதார கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட்டதுடன் உள்ளூர் கைத்தொழில்களும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன. அதற்குப் பதிலாக ஏகாதிபத்திய வாதிகளின் நலனை பூர்த்தி செய்யும் வகையில் இப்பிராந்திய பொருளாதார கட்டமைப்பானது மாற்றியமைக்கப்பட்டு வெளிநாட்டு உற்பத்திப்

பொருட்களில் தங்கியிருக்க வேண்டிய நிலையினை தோற்றுவித்தமை இத்தென்னாசிய நாடுகள் சுதந்திரமடைந்ததன் பிற்பாடும் பொருளாதார நிலையில் தேக்க நிலையை இன்னும் அனுபவித்து வருவதற்கு பிரதான காரணியாகும்.

காலணித்துவ காலகட்டத்தில் இப்பிராந்தியத்தின் பொருளாதாரத் தன்மையானது ஏகாதிபத்திய வாதிகளின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் அமைக்கப்பட்டதனால் காலணித்துவ வாதிகள் இப்பிராந்தியத்தினை விட்டு வெளியேறியபோது இப்பிராந்திய நாடுகளிடையே விஷேடமாக இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கிடையே பொருளாதார நலன் தொடர்பான முரண்பாடுகள் தோன்றுவதற்கு துணை புரிந்தது எனலாம். காலணித்துவ ஆட்சிக்காலத்தில் கிழக்கு வங்காளமானது (தற்போதைய பங்களாதேஷ்) சணலினை உற்பத்தி செய்யும் பிரதான பிராந்தியமாக காணப்பட சணலினை கைத்தொழில் மூலப்பொருளாக உற்பத்திசெய்யும் தொழில்சாலைகள் மேற்கு வங்காளத்தில் (தற்போதைய இந்தியா) அமைக்கப்பட்டது. இதே போல தற்போது பாகிஸ்தானாக இருக்கும் பகுதி காலணித்துவ ஆட்சிக்காலத்தில் பஞ்சினை உற்பத்தி செய்யும் பிரதான பிரதேசமாக காணப்பட அதனைத் தொழிலாகக் கொண்ட பெரும்பாலான தொழில்சாலைகள் தற்போதைய இந்தியாவின் பகுதியிலேயே அமைக்கப்பட்டு காணப்பட்டன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 1947இல் இருந்து இப்பிராந்தியத்தில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதில் இருந்து இப்பிராந்தியம் சுதந்திரமடைந்து புதிதாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசுகள் உதயமாகிய போது அவற்றுக்கிடையே பொருளாதார நலன் சம்பந்தமான பிரச்சினைகளும் ஆரம்பமாகின. இதன் விளைவாக சர்வதேச மட்டத்தில் பொருளாதார ரீதியான ஒற்றுமை இப்பிராந்திய அரசுகளிடையே ஏற்படுவதற்குப் பதிலாக போட்டி ஏற்படலாயிற்று. தென் ஆசிய நாடுகள் பெருமளவிற்கு ஒரே வகையான உற்பத்திப் பொருட்களை உலக சந்தைக்கு ஏற்றுமதி செய்வனவாகவும் உள்ளன. இந்தியாவும் பங்களாதேஷும்

சணல் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காகவும், இந்தியாவும் இலங்கையும் தேயிலைக்காகவும், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் என்பன துணிவகைகளை உலக சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்காகவும் போட்டியிடுகின்றன. இவ்வாறே, 1970களின் கடைசிப்பகுதியில் இருந்து மத்திய கிழக்குக்கு மனிதவளச் சக்தியை ஏற்றுமதி செய்வதற்காகவும் இந்நாடுகள் போட்டியிட்டு வருகின்றன.

சனத்தொகையில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பானது இப்பிராந்திய நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப்பில் எதிர்மறையான தாக்கத்தினை செலுத்துகின்றது. அத்துடன் மனித வளச்சக்தியில் சிறப்பான நிலையில் இருந்து வருவதனால் தற்போது சுமார் 350 மில்லியனுக்கும் மேற்பட்டோர் ஊழியர்படையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் இதன் வருடாந்த அதிகரிப்பானது இப்பிராந்தியத்தின் மொத்த சனத்தொகை வளர்ச்சி வீதத்தை (2%) குறித்துக் காட்டுவதாகவும் உள்ளது. வளர்ச்சியடைந்து வரும் ஊழியர் படை அதிகரிப்பினால் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டிருக்கும் இப்பிராந்தியம் வேலைவாய்ப்பினை வழங்குவதிலும் சிரமங்களை எதிர் நோக்குகின்றது. இதன் விளைவாக பாரிய சவால்களை எதிர்நோக்குவதுடன் எதிர்கால அபிவிருத்தி உபாயங்களில் இப்பிராந்தியமானது புதியதொரு கொள்கையினை கையாள வேண்டிய நிர்ப்பந்த நிலையையும் உருவாக்கியுள்ளது.

வளர்ச்சியடைந்து வரும் சனத்தொகைக்கேற்ப மனித ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட விடயத்தில் இப்பிராந்தியமானது குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்தை எட்டியுள்ள போதும் இவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் செலவுகள் மொத்த தேசிய உற்பத்தியில் மிகக் குறைந்தளவு விகிதத்தையே இந்நாடுகள் நிர்ணயித்து வருகின்றன. தென்ஆசிய அரசுகளில் பெரும்பாலான மக்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருவதனால் சுத்தமான நீர், ஆரோக்கியமான வாழ்விடம் போன்றவற்றுக்காக தொடர்ந்தும்

போராட்டம் நடத்தி வருகின்றனர். அத்துடன் கிராமப்புறத்தில் இருந்து நகர்ப்புரத்தை நோக்கிய மக்களின் இடப் பெயர்வு தொடர்ந்து அதிகரித்து வருவதனால் நகர்ப்புறங்களில் சமூக, பொருளாதார, சுகாதார, கல்வி மற்றும் வீட்டுப் பிரச்சினைகளுக்கும் தென்ஆசிய அரசுகள் முகம் கொடுக்கின்றன.

மதம் மற்றும் சமூக ரீதியில் தென்னாசிய பிரதேசமானது பாரிய வேறுபாட்டைக் கொண்டதாக உள்ளது. இப்பிராந்தியத்தின் பிரதான மதங்களாக இந்து, இஸ்லாம் மற்றும் பௌத்தம் என்பன ஏதாவது ஓர் அரசில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகளில் பிரதான பங்கினை வகிப்பதுடன் அரசியல் கலாசாரத்திலும் முக்கியத்துவம் பெற்றனவாக விளங்குகின்றன.[21] இந்து, மற்றும் பௌத்த மதங்கள் என்பன இப்பிராந்தியத்திலே தோற்றம் பெற்ற மதங்களாக விளங்க இஸ்லாமிய மதமானது பல நூற்றாண்டு காலமாக இப்பிராந்தியத்தில் பிரதான தாக்கத்தையும் செலுத்தி வருகின்றது. இந்துமதத்தில் சமூக முறைமையானது முக்கியத்துவமுள்ளதாக விளங்குவதுடன் இந்துத் தத்துவத்துடன் இணைந்து காணப்படும் சாதி முறையானது அவர்களின் அரசியல் முறையமைவில் ஒரு ம்ரபுரீதியான அடிப்படையையும் வழங்கி வருகின்றது.

பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவுகளில் தனியொரு பிரதான மதமாக இஸ்லாம் காணப்பட்ட போதும், ஏனைய மதத்தவர்களான இந்துக்களும் மற்றும் கிறிஸ்தவர்களும் சிறிதளவு வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இலங்கையிலும் இந்தியாவிலும் முறையே பௌத்தர்களும் இந்துக்களும் பெரும்பான்மையாகக் காணப்பட்ட போதும் இஸ்லாம் மற்றும் கிறிஸ்துவம் ஆகிய மதங்களினை பின்பற்றுவோரும் கணிசமாக வாழ்ந்து வருகின்றனர்.

தென்னாசியாவின் ஏனைய அரசுகளான பூட்டான், நேபாளம் ஆகியனவற்றுள் பூட்டானில் பௌத்த மதம் பிரதான இடத்தை வகித்து வருவதுடன் கணிசமான அளவு இந்துக்களும் இங்கு

வாழ்ந்துவருகின்றனர். அதேபோல நேபாளமானது இப் பிராந்தியத்தில் இந்து மத அரசாக பிரகடனப்படுத்தப் பட்டு ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது.

பன்மைத்தன்மையைப் பெற்றுள்ள தென்னாசியாவானது மதங்களுக்குள் பல பிரிவுகளையும் அமைப்புக்களையும் கொண்டமைந்த பிராந்தியமாகவும் உள்ளது. பாகிஸ்தானில் பெரும்பான்மையினர் முஸ்லிமாக இருந்த போதும் அவர்களுள் பெரும்பான்மையினர் சுன்னி முஸ்லிம்களாகவும் சிறு பகுதியினராக சியா முஸ்லிம்களும் காணப்படுகின்றனர். இவ்வாறே இந்தியாவில் இந்து மதம் பிரதான மதமாக காணப்பட்ட போதும் இந்து மதத்தினுள் காணப்படும் சாதிமுறைமை அச்சமுதாயத்தை மேலும் பிளவு படுத்தியுள்ளது. இதன் விளைவாக ஒரு சமயத்தினுள்ளே பதற்ற நிலை தோன்றுவதற்கு (Intra Religious Tension) வாய்ப்பு ஏற்படுகின்றது.[22]

தென்னாசிய அரசுகளில் மதம் பெருமளவில் உணர்வுகளை தூண்டி இந்நாடுகளின் தேச நிர்மாணப்பணியில் (Nation Building) பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்துவதனை அவதானிக்கலாம். இந்தியாவில் இந்து - முஸ்லிம் முரண்பாடானது அதன் சுதந்திர காலத்துக்கு முன்பிருந்தே இடம் பெற்று வருகின்றது. இது சுதந்திரத்திற்குப்பின்னர் இந்தியா கடைப்பிடிக்க வந்த மதச்சார்பற்ற கொள்கைக்கு பாரிய சவாலாக இருந்து வருவதுடன் 1980களின் கடைசியில் அரசியலில் செல்வாக்கு பெற்று வருகின்ற விஸ்வ ஹிந்து பரிசத் (Vishwa Hindu Parishad) மற்றும் பாரதீய ஜனதா கட்சி என்பவற்றின் தீவிர தேசிய வாத இந்துத்துவக் கொள்கையில் இந்தியாவின் பன்மத சமூக அமைப்புக்கும் மதச்சார்பின்மைக் கொள்கைக்கும் பெரும் தீங்கு விளைவிப்பதாக உள்ளது.

மேலும் ஓர் அரசினுள் இடம் பெறும் மதரீதியான மோதலானது தென் ஆசியாவின் ஏனைய அரசுகளிலும் எதிரொலிப்பதனை அவதானிக்கலாம். பல நூற்றாண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட பாபர்

முஸ்லிம் பள்ளிவாசல் தொடர்பாக இந்தியாவில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட மத வன்முறையானது பங்காளதேஷிலும் பாகிஸ்தானிலும் அங்கு சிறுபான்மையாக வாழ்ந்த இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பகைமையைத் தூண்டியது.

இவ்வாறே இலங்கையில் பௌத்த - இந்து மத முரண்பாடு (சிங்களவர் - தமிழர்) இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டுக்கு காரணமாகியது. இதன் விளைவாக மத ரீதியான மோதலானது தென் ஆசிய அரசுகளுக்கிடையே சுமுகமான வளர்ச்சிக்கு தடையாக இருந்து வருகின்றது.

அநீதியான தேர்தல், பண அரசியலின் வருகை அரசியல் முறையில் ஏற்படுத்தும் துணிகரமான குற்றவியல்கள், அரசியல் ஊழல் அரசின் நேர்மையை அழித்து தின்பவையாக வளர்ந்து வருகின்றன. 1989இல் இந்தியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 6 பில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டது. இவற்றில் 150 தொகுதியில் பணத்தினைப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றிபெற செய்யப்பட்டது என அப்போதைய தேர்தல் ஆணையாளர் ரீ.என். சேசன் குறிப்பிட்டார். 545 ஆசனங்களைக் கொண்ட இந்திய மத்திய பாராளுமன்றத்திற்கு ஒரு பாராளுமன்ற ஆசனத்துக்கு சராசரியாக இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகியுள்ளது. 1997இல் பாகிஸ்தானில் நடை பெற்ற தேர்தலில் பாராளுமன்ற தேர்தலுக்கு போட்டியிட்ட ஒரு வேட்பாளர் தான் தெரிவு செய்யப்படுவதற்கு 120,000 அமெரிக்க டொலரினை சராசரியாக செலவு செய்ய நேரிட்டது.

தென்னாசியாவில் ஒரேமாதிரியானவர்கள் அரசியலில் செல்வாக்கு செலுத்தி வருகின்றனர். அவர்களை நாம் நான்கு வகைக்குள் அடக்கலாம். நிலப்பிரபுக்கள், கைத்தொழிலாளர்கள், பணியகவமைப்பாளர்கள், இராணுவ அதிகாரிகள். சக்தி வாய்ந்த வெகுசன அரசியல் தடைசெய்யப்பட்டு அதிகாரத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

நுழைவதற்கு பெருமளவு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இப்பிராந்தியம் சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் இருந்து இந்தக் குடும்பமே அரசியல் துறையில் செல்வாக்கு செலுத்தி வருவதனைக் காணலாம்.[23]

எல்லா தென்னாசிய அரசுகளும் வன்முறை மற்றும் முரண்பாடுகளில் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே முரண்பாட்டுக்கு பிரதான பங்களிப்புச் செய்யும் காரணியாக மதம் இருந்து வருகின்றது. மத அடிப்படைவாதமானது அரசியல் எதிரிகளை / எதிர்க்கட்சிகள் பழிவாங்கப்படுவதற்கு அரசினால் ஆதரவளிக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டும் வருகின்றது. இவ்வாறான முரண்பாடுகளுக்கும் வன்முறைகளுக்கும் பிரதான காரணமாக இன அடையாளம், மதம், மொழி, வேலைவாய்ப்பின்மை, என்பவற்றுடன் சமத்துவமற்ற நிலப்பங்கீடு வருமானப்பங்கீடும் பிராந்திய வளர்ச்சிகளும் இப்பிணக்குகளுக்கு மரபுரீதியான செல்வாக்கு செலுத்தி வருகின்றன. பாதாள உலக கள்ளக்கடத்தல்காரர்கள், கொலைகாரர்கள், போதை வஸ்து பாவிப்போர் போன்றோர் அரசியல் வாதிகளினால் தமது தேர்தல் வெற்றிக்காக தம் இன வன்முறையை தூண்டுவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.[24]

## சனநாயகமும் அரசியலும்

தென்னாசியப் பிராந்தியமானது உலகத்தில் மிகப்பெரிய சனநாயக பிரதேசமாக திகழ்கின்றது. சனநாயகத்தின் ஓர் அளவு கோலாக இங்கு வெளியிடப்படுவது மனதில் பதியத்தக்கதாக அமைந்துள்ளது. 1995இல் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், மற்றும் நேபாள அரசுகளில் சுமார் 1.219 பில்லியன் மக்கள் தேர்தலில் வாக்களித்து உள்ளனர். இது உலக சனத்தொகையில் 20% யும் விட அதிகமானதாகும்.

இவ்வட்டகையில் வாழும் சிறுபான்மையினரின் கோரிக்கைகள் காரணமாக அரசின் சட்டபூர்வமான தன்மை பாரிய சவாலுக்கு உட்படுவதுடன் தீவிரமான உள்நாட்டு பிணக்குக்கும் முகம் கொடுத்து வருகின்றது. இவ்வரசுகளின் பொதுவான வரலாறு மற்றும் கலாசார தன்மைக்கு மாற்றமாக இப்பிராந்திய அரசியல் அபிவிருத்தியானது வேறுபட்ட வழிமுறைகளைப் பின்பற்று வதனைக் காணலாம். சுதந்திரமடைந்த காலகட்டத்தில் இருந்து இலங்கையும் இந்தியாவும் சனநாயக முறையொன்றினை வெற்றிகரமான முறையில் கடைப்பிடித்துள்ள போதிலும் இந்தியாவில் 1975 - 1977 வரையான காலகட்டத்தில் அவசரகாலச் சட்டத்தினாலும் இலங்கையில் 1979இல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தினாலும் மற்றும் 1988ல் கொண்டு வரப்பட்ட அவசரகால சட்டவிதிகள் என்பனவற்றினாலும் அரசியல் உரிமைகளும் தனிமனித சுதந்திரங்களும் கட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஆனாலும் நேபாளத்தில் 1959, 1960 காலகட்டங்களில் சனநாயகத்தை நோக்கிய முதல் நகர்வு இடம்பெற்ற போதிலும் அது வெற்றி பெற்றதாக கூறமுடியாது. பாகிஸ்தானில் 1970 தொடக்கம் 1977க்கு இடைப்பட்ட காலத்திலும் பங்காளதேஷில் 1972 – 1977க்கும் இடைப்பட்ட காலத்திலும் சனநாயகத்தை மீளக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்ட போதும் அதற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் அதிகாரத்துவ ஆட்சிமுறை தொடரலாயிற்று. ஆனாலும் பாகிஸ்தானில் 1988ல் சியா உல் ஹக் இறந்ததன் பிற்பாடு பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டமையால் அங்கு மீண்டும் சனநாயக அரசாங்க முறையொன்றை உயிர்பெற வாய்ப்பேற்றபட்ட போதும் பாகிஸ்தானில் 1999 ஒக்டோபரில் மீண்டும் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டமையால் சனநாயகத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி மீண்டும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது எனலாம்.

ஆகவே தென் ஆசியாவைப் பொறுத்தவரை சனநாயகம் என்பது சற்று சிக்கலாக உள்ளது என்பதனை அவதானிக்கலாம். இந்த

வகையில் சனநாயகம் சிறந்து விளங்குவதற்கு சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என Diamond, Linz மற்றும் Lipset ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர். முதலாவதாக ஓர் அரசினுள் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களிடையேயும் தனிப்பட்டவர் களிடையேயும் பலாத்காரத்தை பயன்படுத்தாமல் வரையறுக்கப்பட்ட காலத்தினை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் மூலமாக அரசாங்க அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான போட்டி முறையொன்று காணப்படல் வேண்டும். இரண்டாவதாக எந்தவொரு சமூகக் குழுவினையும் அரசியல் பங்குபற்றுதலில் இருந்து நீக்காமல் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் ஊடாக சுதந்திரமான அரசியல் பங்குபற்றல் அனுமதிக்கப்படல் வேண்டும். மூன்றாவதாக மேற்குறிப்பிடப்பட்டவையின் ஊடாக சமூக மற்றும் அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாவதுடன் இவற்றின் மூலம் போட்டியையும் பங்குபற்றலையும் உறுதிப்படுத்த வேண்டும்.[25]

சனநாயகத்தைப் பற்றிய இவ்வியாக்கியானத்தை தென்ஆசியப் பிராந்தியத்தில் பிரயோகிக்கும்போது பல விடயங்கள் வெளிக் கொணரப்படுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ்வியாக்கியானத்தின் முதற்பகுதியை அவதானித்தால் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக வழமையாக நடைபெறும் தேர்தல்கள் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வன்முறையுடன் போட்டி நிலவுவதனை அவதானிக்கலாம். தென்ஆசியாவின் பன்மத சமூக அமைப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவாறான கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளமை இப்பிராந்தியத்துக்கே உரித்தான பொதுவான தன்மையாக உள்ளதுடன் தென்ஆசியாவின் சகல அரசுகளிலும் பலகட்சி முறை (Multi - Party System) நிலவுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தியாவில் மிக நீண்டகாலமாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மத்தியிலும் மாநிலத்திலும் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ள போதிலும் காங்கிரஸ்கட்சிக்கு போட்டியாக 1990களின் ஆரம்பத்தில் இருந்து

பாரதிய ஜனதா கட்சி வளர்சியடைந்து உள்ளமை அங்கு கட்சி முறைமை பிராந்திய மயப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதனை உறுதிப்படுத்துகின்றது. 1956இல் இருந்து இலங்கையில் கட்சி முறையானது ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றிடையே பலத்த போட்டியாக உள்ள போதும் 1978ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியல் அமைப்பில் விகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் பிற்பாடு அதிகாரத்துக்கான போட்டியில் பெரிய கட்சிகளுடன் பிராந்திய மற்றும் இனக்குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் போட்டியில் ஈடுபட்டு வருவதனால் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்பன சிறிய கட்சிகளுடன் இணைந்து அதிகாரத்துக்கான போட்டியில் ஈடுபட்டு வருகின்றன.[26] பங்காளதேஷில் அவாமிலீக் (AL) மற்றும் பங்களாதேஷ் தேசிய கட்சி (BNP) என்ற இருபெரும் கட்சிகளுடன் சிறிய கட்சிகளும் அதிகாரத்துக்கான போட்டியில் ஈடுபட்டு வருகின்றன. 2001 ஒக்டோபரில் நடைபெற்ற தேர்தலில் பங்களாதேஷ் தேசிய கட்சி நான்கு சிறிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டது. பாகிஸ்தானில் சுல்பிகார் அலி பூட்டோவினால் உருவாக்கப்பட்ட பாகிஸ்தான் மக்கள் கட்சி (PPP) 1970களின் ஆரம்பத்தில் சனநாயக அரசாங்க முறையொன்று தோற்றம் பெற்றபோது அரசியல் மாற்றத்தைக் கொண்டு வந்ததுடன் 1988க்குப் பிற்பாடு மீண்டும் அங்கு சனநாயகம் மீட்சியடையத் தொடங்கிய போது PPPக்கு போட்டியாக நவாஸ்சரிபை தலைமையாகக் கொண்ட பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (PML) எழுச்சியடைந்துள்ளதுடன் மற்றும் சிறிய கட்சிகளும் அதிகாரத்துக்கான போட்டியில் ஈடுபட்டும் வருகின்றன.

1950களில் நேபாளத்தில் அரசியல்கட்சிகள் இயங்கிய போதிலும் பின்னர் இங்கு கட்சிகள் மன்னரினால் சட்டபூர்வமாக தடை செய்யப்பட்ட போதும் நேபாள காங்கிரஸ் மற்றும் பல இடது

சாரிக்கட்சிகளின் இடையுறாத முயற்சியின் பலனாக 1991களில் இருந்து அங்கு அரசியல் முறையானது அரசியல்கட்சிகளினால் கட்டுப்படுத்தப்பட்டு வெற்றியளித்து வருகின்றது. அத்துடன் தென் ஆசியாவின் பல்வேறுபட்ட பிராந்தியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியதும் மொழிவாரியானதும், மதம், மதச்சார்பற்ற சாதியை அடிப்படையாகக் கொண்டதும், பழங்குடியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியதுமான பரந்துபட்ட அடிப்படையில் கட்சிகள் காணப்படுவதனால் அதிகாரத்துக்கான போட்டி உத்தரவாதப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது.

ஆனாலும் தேர்தல்கள் பலவந்தம் பிரயோகிக்கப்படாமல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் இடம்பெற்று வந்துள்ளனவா என்று வினா எழுப்பினால் அதற்கு சாதகமான பதில் இல்லையென்றே கூறலாம். இவையெல்லா வற்றுக்கும் மாறாக தேர்தல் நடைபெறும் கால கட்டத்தில் பலாத்காரமும் வன்முறையும் பிரயோகிக்கப்படுவது எல்லாத் தென் ஆசிய நாடுகளிலும் காணக் கூடிய பொதுவான பண்பாக அமைகின்றது. 1998 இல் இந்தியாவில் நடைபெற்ற 12வது பாராளுமன்ற பொதுத் தேர்தலில், தேர்தலுடன் சம்பந்தப்பட்ட வன்முறையினால் 65 பேர் கொல்லப்பட்டார்கள். ஆனாலும் தேர்தல் ஆணையாளரின் கருத்துப்படி இத்தேர்தல் பெருமளவுக்கு அமைதியாக நடைபெற்றது எனக்குறிப்பிடுகின்றார். ஏனெனில் 1996இல் நடைபெற்ற 11வது பாராளுமன்ற தேர்தலில் 213 பேர் கொல்லப்பட்டமையாகும். இதே போலவே ஏனைய தென்ஆசிய நாடுகளிலும் தேர்தலுடன் சம்பந்தப்பட்ட வன்முறைகள் இடம்பெற்றே வந்துள்ளது. இலங்கையில் 1994இல் இடம்பெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தேர்தலுடன் சம்பந்தப்பட்ட வன்முறைகள் சுமார் 3000 இடம் பெற்றதாக அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. அதேவேளை பங்காளதேஷில் 1996இல் இடம்பெற்ற தேர்தலில் சுமார் 9000 வாக்குச் சாவடியில் வாக்களிப்பு மோசடிகளும் வன்முறைகளும் இடம் பெற்றுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய அரசுகளில் 1947 – 2001 வரை 39 பாராளுமன்ற பொதுத் தேர்தல்கள் இடம் பெற்றுள்ளதுடன் தேர்தல்கள் காலத்துக்குக் காலம் நடைபெற்றுவருகின்றது என்பதனையும் அவதானிக்கலாம்.[27] இவ்வாறு தேர்தல்கள் நடைபெற்ற போதும் இத்தேர்தல்கள் நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெற்றதா என்ற அளவீடு ஒன்றை மேற்கொள்வது கடினமான பணியாகும். ஏனெனில் தேர்தல்கள் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெற்றது என்பதனை அளவீடு செய்வதற்கு ஒரு "நியம அளவீடு" இல்லாததன் விளைவாகவே அவை பற்றிய சரியான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள முடியாது உள்ளது. ஆனாலும் பங்காளதேஷில் 2001ல் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தல் பற்றி அத்தேர்தலில் போட்டியிட்டு அதிகாரத்தை இழந்து தோல்வியடைந்த கட்சியின் தலைவியான சேக் ஹசீனா கருத்து வெளியிடும் போது இத்தேர்தலானது சுதந்திரமாக நடைபெற்றது. ஆனால் நேர்மையாக நடைபெறவில்லை. (Free but not fair) என குற்றஞ்சாட்டினார். ஆனால் இத்தேர்தலை அவதானிக்க வந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இத்தேர்தல் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடைபெற்றது என அறிக்கை வெளியிட்டனர். இதே போல் இலங்கையில் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் பாரிய வன்முறைச் சம்பவங்களும் பலாத்காரமும் இடம்பெற்றன. அது மட்டுமல்லாமல் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு அமைச்சரே தனது சக அமைச்சர் தேர்தல் வன்முறையில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றார் என பத்திரிகையாளர் மாநாட்டில் குற்றம் சாட்டிய நிலையும் தோன்றியது.

அதுமட்டுமல்லாமல் மிக அண்மைக் காலங்களில் இலங்கையில் தேர்தல் காலத்தின்போது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரச சொத்துக்களையும் அரச கட்டுப்பாட்டில் இருக்கும் தகவல்தொடர்பு சாதனங்களையும் ஆளும் கட்சி பயன்படுத்தி வருவதாக பரவலான குற்றச்சாட்டுகள் எதிர்க்கட்சியினால் தெரிவிக்கப்படுகின்றது. அண்மைக் காலங்களின் அரசியல் நிகழ்வு

மாற்றங்களுக்கு மின்னியல் தொடர்பு சாதனங்கள் பெருமளவு பங்காற்றி வருவதனால் இவ்வகையான தகவல் தொடர்பு ஊடகங்களை ஆளும் கட்சி தவறாக பயன்படுத்தும் போது தேர்தலின் நேர்மை பற்றிய ஐயம் ஏற்பட்டு வருகின்றது. தற்போது 17வது திருத்தச் சட்டத்தின் மூலம் பல சுதந்திரமான ஆணைக்குழுக்களை ஏற்படுத்தக் கூடிய தத்துவத்தை இத்திருத்தச் சட்டம் கொண்டிருப்பதன் விளைவாக எதிர்காலத்தில் இடம்பெறப்போகும் தேர்தல்கள் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறக்கூடிய சாத்தியப்பாட்டை தோற்றுவித்துள்ளது. இதன்பயனாக அரச சொத்துக்கள் தனியொரு கட்சியின் தேர்தல் சுயநலத்துக்காக துஷ்பிரயோகம் செய்யப்படுவது மட்டுப்படுத்தப் படலாம்.

இவ்வாறே காலத்துக்குக்காலம் இடம்பெற்றுவரும் தேர்தல்களினால் அதிகாரத்தில் இருந்த அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு புதிய அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளதனையும் நாம் அவதானிக்கலாம். 1947 – 2001 காலத்தில் நடைபெற்ற தேர்தல்களில் 28 தடவைகள் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் எதிர்க்கட்சியிடம் தோல்வியடைந்துள்ளன.[28] மேலும் 1990க்கும் 2000க்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையைத் தவிர (2000ம் ஆண்டில் மீண்டும் PAயே அரசாங்கத்தை அமைத்தது). எந்தவொரு அரசிலும் ஆட்சியிலிருந்த அரசாங்கம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றாமல் எதிர்க்கட்சிகளிடம் தோல்வியடைந்ததெனலாம்.

### தேச நிர்மாணம் (Nation Building)

பன்மைத்துவ தன்மை பொருந்திய தென்ஆசியாவானது ஓர் அரசுக்குரிய பொதுவான அரசியல் தத்துவங்களை அமுல்படுத்துவதன் ஊடாக அல்லது பொதுவான மொழியை அறிமுகம் செய்வதன் ஊடாக அவர்களிடையே ஒரே தேசத்தவர் (One Nation) என்ற விடயத்தை கட்டியெழுப்புவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்ட போதும் பன்மைத்துவ முரண்பாடுகளை அவ்வரசுகள்

எதிர்கொள்வதனால் உயர்ந்தளவு முரண்பாட்டுக்கு முகம்கொடுத்து வருகின்றன. இனக்குழுக்களின் அபிலாஷைகளை ஏற்று இணங்கிச் செல்லக் கூடியவாறு இப்பிராந்திய அரச நிறுவனங்கள் வளர்ச்சியடையாததன் பலனாக தேச நிர்மாணப்பணி பாரிய தாக்குதலுக்கு உட்படுகின்றது. தென் ஆசியாவின் முஸ்லிம்களுக்காக தனியான அரசு ஒன்றினை கட்டியெழுப்ப ஆர்வம் கொண்ட முகம்மட் அலி ஜின்னாவின் எண்ணமானது 1970ல் நடைபெற்ற பாகிஸ்தானின் முதலாவது சனநாயகத் தேர்தலில் கிழக்கு பங்காளிகளின் (கிழக்கு பாகிஸ்தான்) கூடிய சுயாட்சிக் கோரிக்கையை பாகிஸ்தானிய ஆளும் வர்க்கத்தினர் (Ruling elite) மூர்க்கத்தனமாக நிராகரித்தமையால் தோல்வியடைந்தது எனலாம். இலங்கையில் பன்மைத்துவ சமூக அமைப்புக்கேற்ப தேசிய ஒருமைப்பாட்டு வழிமுறையின் ஊடாக தேசத்தை கட்டியெழுப்பும் பணி தடைப்பட்டு வருவதனை அவதானிக்கலாம். பௌத்த தேசிய வாதக் குழுக்கள் சிங்கள தேசிய கட்சிகள் மீது தொடரான அழுத்தம் பிரயோகித்து வருவதன் விளைவாக இலங்கைத் தமிழர்களின் பிரிவினைவாதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட தீர்வின் மூலம் தமிழர்களை திருப்திப்படுத்த மேற்கொள்ளும் முயற்சியை இப்பௌத்த குழுக்கள் எதிர்ப்பதனால் தேச நிர்மாணப்பணி பின்னடைவை எதிர்நோக்குகின்றது. இதே போலவே இலங்கையில் கணிசமாக வாழும் முஸ்லிம்களுக்காக கல்முனை கரையோர மாவட்டத்தையும் மற்றும் தென்கிழக்கு பிராந்திய சபையையும் வழங்கி அவர்களை திருப்திப்படுத்த மேற்கொள்ளும் முயற்சியை சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து எதிர்ப்பதனால் இலங்கையின் இப்பிரதான சமுதாயங்களுக்கிடையே தேசத்தை கட்டியெழுப்பும் பணி பாரிய சவாலுக்கு உட்பட்டுள்ளது.

இந்தியாவில் தேச நிர்மாணப் பணியில் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்ககூடியவாறு அதன் சமஷ்டிப்பண்பும் மற்றும் சட்ட முறைமைகளும் காணப்படுவதனால் அவற்றை ஓரளவு கட்டுப்படுத்தக்

கூடிய தன்மையைப் பெற்றுள்ளது. அந்தவகையில் வெவ்வேறுபட்ட மதக்குழுக்களுக்கேற்ற மாதிரியான தனியான சட்டங்களும், மொழியை அடிப்படையாகக் கொண்டு புதிய மாநிலங்களையும் உருவாக்கிக் கொள்ளல் (புதிதாக இந்தியாவில் வனாச்சல் மற்றும் உத்தராஞ்சல் என்ற இரண்டு புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டுள்ளது). பழங்குடி சிறுபான்மையினருக்காக சுயாட்சி சபைகளை (Autonomous Council) உருவாக்கல் என்பன இவ்வாறு எழும் பிணக்குகளைத் தீர்ப்தற்காக இந்தியா கைக்கொண்டு வரும் உபாயங்களாகும். ஆனாலும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலத்திலும் மற்றும் ஜம்மு காஷ்மீரிலும இடம் பெற்று வரும் பிரிவினைப் போராட்டங்களும் வன்முறைகளும் அத்துடன் சிறுபான்மையினருக்கு எதிராக முக்கியமாக முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களும் இந்தியா தேச நிர்மாணப்பணியில் இன்னும் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றது என்பதனை நிருபிப்பதாக அமைகின்றன எனலாம்.

தேசிய அடையாளத்துக்காக மதக்கொள்கையை அறிமுகப்படுத்தும் போது தேச நிர்மாணப்பணி மிகவும் கடினமானது என்பதற்கு உதாரணமான அரசாக பாகிஸ்தான் விளங்கி வருகிறது. 1977இல் பதவிக்கு வந்த பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் சியா உல் ஹக் அவர்கள் தேசத்தின் பண்பாக இஸ்லாமிய அடையாளத்தை பலப்படுத்தினார். இஸ்லாமிய மயமாக்கப்பட்ட அரசியலானது முஸ்லிம்களுக்கிடையே பரவலான ஆதரவைப் பெற்றபோதும் பாலுகிஸ்தானிலும் மற்றும் சிறுபான்மையினரிடையேயும் வன்முறைக்கு இட்டுச் சென்றது. இவ்வாறே பங்காளதேசத்தில் 1977லும் மற்றும் 1987லும் இராணுவ ஆட்சியாளர்கள் மதச்சர்பற்ற பண்பினைக் கொண்ட அரசியலமைப்பில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்திய போது சிறுபான்மையினமான இந்துக்கள் மற்றும்

பௌத்தர்கள் என்போரின் பலத்த எதிர்ப்பினை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது.

சனநாயக முறைமையானது மதத் தேசிய வாதத்தினால் எவ்வாறு சுலபமாக பாதிப்படையக் கூடியது என்பதற்கு எடுத்துக் காட்டாக இலங்கை விளங்கி வருகின்றது. 1950களில் எழுச்சியடைந்து வந்த பௌத்த தேசிய வாதமானது சிங்கள் அரசியல் கட்சிகளில் பிரதான அரசியல் சக்தியாக தன்மை ஈடுபடுத்திக் கொண்டதானல் பௌத்த மதம் இலங்கை அரசின் பிரதான மதமாக 1972 மற்றும் 1978களில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக்களில் புகுத்தப்பட வழி வகுத்தது எனலாம். அது மட்டுமல்லாமல் 1994க்குப் பின்னர் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் முன்வைக்கப்பட்ட உத்தேச அரசியலமைப்பிலும் தொடர்ந்தும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.[29]

சமஷ்டி ஏற்பாட்டில் காணப்படுகின்ற குறைபாடுகளாலோ அல்லது மத அடையாளத்தை அமுல்படுத்துவதனாலேயோ சிறுபான்மையினருக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நிரந்தரமான முரண்பாடுகள் இடம் பெறுகின்றது எனக்கூற முடியாது. வேறுபட்ட இனக்குழுக்கள் தேசிய மொழி தொடர்பாக தத்தமது கலாச்சார மற்றும் அடையாளத்தை காப்பதற்கான போராட்டமாக மட்டுமல்லாது உறுதியான பொருளாதார நலனை அடிப்படையாகக் கொண்டதும் உயர்கல்வி நிறுவனங்களில் மொழி மூலமான கற்கைகளையும் பெறவேண்டும் என்பதற்காகவும் போராடுகின்றனர். இது சமூகத்தை ஒன்று திரட்டும் சந்தர்ப்பத்திலும் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. மொழி தொடர்பாக இனக்குழுக்களுக்கிடையே காணப்படும் போட்டியானது பொதுத்துறைகளில் வேலை வாய்ப்புக்காகவும் மற்றும் ஏனைய துறைகளில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்காகவும் அமைவதனால் பொதுத்தேவை கருதி அமைதியான முறையில் கொள்கை உருவாக்கம் மேற்கொள்வதற்கு பதிலாக இது

போட்டியிடும் இனக்குழுக்களிடையே வன்முறையை தோற்றுவிக்கும் அபாயத்தை ஊக்குவிக்கின்றது. இவ்வகையான பிரச்சினையானது சமத்துவமற்ற முறையில் வளப்பங்கீடு மேற்கொள்ளப்பட்டு நன்மை அடைந்த குழுவினை அல்லது இவற்றினால் பாதிப்படைந்த இனக்குழுக்களை இலகுவான முறையில் ஒன்றுதிரட்டும் விசைக்கருவியாக தொழிற்படுவதனை அவதானிக்கலாம். தற்போது தென் ஆசிய அரசுகளில் பொருளாதார தாராளமயமாக்கல் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் செல்வங்கள் இயல்பாகவே சமத்துவமாக பங்கிடப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. புதிய பொருளாதார சமத்துவமற்ற தன்மை மற்றும் சமூக முரண்பாட்டினையும் தொடர்ந்து உருவாகவரும் புதிய கைத்தொழில்துறை மற்றும் பிராந்திய சமத்துவமற்ற தன்மைகள் உருவாகின்ற போது அவை இனச்சார்பு நிர்வாகிகளால் முரண்பாட்டை உருவாக்கின்ற கருவியாக பயன்படுத்தப்படலாம்.

## முடிவுரை:

தென் ஆசியாவின் சமூக பொருளாதார அரசியல் நிலவரமானது பல்வேறுபட்ட வகையிலான பண்புகளையும் பிரச்சனைகளையும் கொண்டமைந்துள்ளது என அவதானிக்கலாம். இப்பலதரப்பட்ட பிரச்சனைகளானது தென் ஆசியாவுக்கே உரித்தான பண்புகளை கொண்டமைந்துள்ளமை முக்கியமானதொரு விடயமாகும். இவ்வாய்வின் மூலம் நான் பலபிரச்சினைகளை அறிமுகப்படுத்தி உள்ளேன் எனலாம். இப்பிரச்சினைகளை இனங்கண்டு தென் ஆசிய அரசுகள் எதிர் கொள்ளும் சமூக, பொருளாதார, தேச நிர்மாணப்பணிப் பிரச்சினை என்பனவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகளை ஒவ்வொரு அரசும் எடுக்க வேண்டியது அவசியமாகும். மந்தமடைந்திருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதுடன் முரண்பட்ட இனக்குழுக்களிடையே தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கி ஒரே

தேசத்தவர் என்ற மனப்பாங்கை வளர்ப்பதற்கான ஆரம்ப அடிப்படைகளை ஒவ்வொரு பிராந்தியத்தின் அரசாங்கங்களும் கைக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. சுதந்திரத்துக்குப் பிந்திய 53 வருட காலத்தில் இப்பிராந்திய அரசுகள் தேசத்தை நிர்மாணிப்பதற்காக பல அவதானமான நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளதை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. ஆனாலும் இம்முயற்சிகள் யாவும் அங்கு வாழும் சகல தரப்பினரையும் திருப்திப்படுத்துவதாக அமையும் போதே அது வெற்றி பெற்றதாகக் கொள்ள முடியும்.

## NOTES & REFERENCES


01. இன்று தென் ஆசியாவில் அமைந்துள்ள அரசுகள் சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் பல்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டும் வந்துள்ளது. சில வரலாற்று ஆசிரியர்கள் இப்பிராந்தியத்தினை இந்திய – பாகிஸ்தானிய உப கண்டம் எனவும் அமைந்துள்ளனர். அந்த வகையில் தென் ஆசியாவின் பழமையான நாமங்களை நினைவு கூறும் முகமாக அப்பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

02. David Wester Land & Lugvar Svanberg (Ed.) (1999), Islam Outside the Arab World, Curzon, London, p. 212.

03. V.C. Smith (1958), The Oxford History of India (4th Edi.) Oxford University Press, London, pp. 01 – 02.

04. Ibid.

05. Charanjit "South Asia – An Economic Rraternity", South Asian Survey, Vol. I, No. 1, March 1976, p. 05

06. Ibid, p. 05.